# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
# அசல் வழக்கு எண் – 81/2024

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம்** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 8 முதல் 12 பிரதிவாதிகளை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளீர்கள் என்றால் பிரதிவாதிகள் ஏற்படுத்திய போலியான ஆவணங்களையும், அதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பட்டாவையும் ரத்து செய்ய வேண்டுமென கேட்டுள்ளேன். அ பதிவேட்டில் சர்வே எண்.228/4 என்பது மாணிக்கம் ஆசாரி பெயரில் உள்ளது என்றால் ஆறுமுகம் ஆசாரி மகன் மாணிக்கம் ஆசாரி பெயரில் உள்ளது. சிட்டா அரச கவுண்டர் மகன் நாகமுத்து, ராஜலிங்கம் மகன் சுப்பிரமணியன், ராஜலிங்கம் மகன் மாணிக்க ஆசாரி ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் அது போலியாக தயார் செய்யப்பட்டது. கணினி அ பதிவேட்டில் மாணிக்க ஆசாரி, நாகமுத்து, சுப்பிரமணி ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்றால் தவறாக உள்ளது.

2) மேற்படி தவறான பட்டா மற்றும் சிட்டாவை ரத்து செய்ய வேண்டுமென வருவாய்த்துறை அலுவலரிடம் மனு கொடுத்தேனா என்றால் 2023ம் வருடம் கொடுத்தேன். அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. நத்தம் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் போது ஏற்பட்ட தவறை உடனே சரிசெய்யாமல் காலதாமதமாக தற்போது வழக்கு தாக்கல் செய்திருக்க காரணம் என்ன என்றால் சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை. வருவாய்த்துறையில் கொடுத்த நகல் மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல 2023ல் வருவாய்த்துறைக்கு எந்த மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டது என்றால் சரிதான்.

3) தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வருவாய்த்துறையில் ஏற்பட்ட அ பதிவேடு, சிட்டா நகல்களை தாக்கல் செய்துள்ளேன். வருவாய்த்துறை ஆவணங்கள் இல்லாமல் உரிமை ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக வருவாய்த்துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளதோ அவர் தான் பத்திரம் பதிவு செய்ய வந்தால் அதை பதிவு செய்யலாம் என்றால்

சரிதான். 8 முதல் 12 பிரதிவாதிகள் முறையாக தங்கள் பணியை செய்து வருகிறார்கள் என்றும் அவர்களை இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினர்களாக சேர்த்துள்ளதால் அவர்களுக்கு எதிராக வழக்கினை தள்ளுபடி செய்ய செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**